இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 22.10.2026

திட்டங்களைக் கவனியுங்கள்!

சென்னையில் மழை காரணமாக தண்ணீர் தேங்கி இருக்கும் சில இடங்களில் நின்று கொண்டு, 'தி.மு.க. செலவு செய்ததாகச் சொன்ன 4 ஆயிரம் கோடி எங்கே?' என்று ரீல்ஸ் எடுத்து போட்டுக் கொண்டு இருக்கி றார்கள் த.வெ.க.வின் பொய்யர்கள்.

இந்த அத்தனை வீடியோக்களையும் ஒரே ஒரு பேட்டியில் காலி செய்து விட்டார் சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் ஐ.ஏ.எஸ். "சென்னையில் 2021ஆம் ஆண்டுக்கு முன்பு தண்ணீர் தேங்க வாய்ப்புள்ள இடங்களாக 700 இடங்கள் இருந்தது. அது இப்போது 291 ஆக குறைந்துள்ளது" என்று சொல்லி இருக்கிறார். அப்படியானால் என்ன பொருள்? 400 இடங்கள் தண்ணீர் தேங்கவிடாமல், தண்ணீர் தேங்காத இடங்களாக மாற்றப்பட்டுள் ளது என்று தான் பொருள். இதுதான் 2021-26 ஆட்சிக் காலத்தில் 'திராவிட மாடல்' அரசின் சாதனை ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.6,495 கோடி மதிப் பீட்டில் 1,422.28 கி.மீ. நீளத்திற்கு புதியதாக மழைநீர் வடிகால் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் ரூ.4,309.30 கோடி மதிப்பீட்டில் 1,076 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடித்து வழங்கியது தான் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனை ஆகும்.

ரூ.58.33 கோடி மதிப்பில் கடப்பாக்கம் ஏரி சீரமைப்புப் பணிகள் தொடங்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 60 நீர் நிலைகளை சீரமைக்கும் பணிகள் ரூ.91.04 கோடி மதிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதில் ரூ.47.23 கோடி மதிப்பில் 37 நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டது. 23 நீர்நிலைகளை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு புதிய முயற்சியாக, நீர்வழிக் கால்வாய்களில் வெள்ளத் தடுப்புச் சுவரின் உயரத்தை உயர்த்தி அமைத்து அதன் கொள்ளளவை அதிகப்படுத்தி, பொதுமக்கள் கால்வாய்களில் குப்பைகளை எறியாத வண்ணம், சங்கிலித் தொடர் இணைப்பு வேலி அமைக்கும் பணி தி.மு.க. ஆட்சியில் செய்யப்பட்டது. 37 நீர்வழிக் கால்வாய்களில் ரூ.196 கோடி மதிப்பீட்டில் இப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.

நிலத்தடி நீர் மீள் நிரப்புத் திறனை அதிகரிப்பதற்கும் வெள்ளத்தைக் குறைப்பதற்கும் நிலையான நகர்ப்புற மேம்பாட்டுத் தீர்வு காண ரூ.22.36 கோடியில் 770 இடங்களில் சுற்றுச்சூழல் தொகுதிகள் (Eco Block) அடிப் படையிலான 500 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன.

கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் உள்ள சுற்றுச்சூழல் தொகுதிகள் அடிப்படையிலான 365 மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ரூ.3.71 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டன.

கோவளம் வடிநிலப்பகுதியில் 35 இடங்களில் சுற்றுச்சூழல் தொகுதிகள் அடிப்படையிலான மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன.

மழைநீர் வடிகால்களில் தூர்வாரும் பணிகளை இடைவிடாமல் தொடர்ந்து செய்து வந்ததும் 'திராவிட மாடல்' அரசுதான்.

கோவளம் வடிநிலப் பணிகள், கொசஸ்தலையாறு வடிநிலப் பணிகள், டிரஸ்ட்புரம் கால்வாய்ப் பணிகள், கடப்பாக்கம் ஏரி மேம்பாடு, அடையாறு ஆற்றுப் புனரமைப்பு, ஓட்டேரி நல்லா மற்றும் விருகம்பாக்கம் கால்வாய் கள் புனரமைப்பு, தூர்வாரும் பணிகள் ஆகியவற்றைச் செய்ததும் 'திராவிட மாடல்' அரசு தான்.

ரூ.2,359.73 கோடி மதிப்பில் 3,455.44 கி.மீ. நீளத்திற்கு 19,849 சாலைகள் மற்றும் உட்புறச்சாலைகள் முடிக்கப்பட்டன.196.71 கி.மீ. நீளத்திற்கு 1,315 சாலைகள் அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

தி.மு.க. ஆட்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சராக இருந்த கே.என்.நேரு பல்வேறு ஆதாரங்களை அடுக்கி அறிக்கை வெளியிட் டுள்ளார்.

இவை அனைத்துக்கும் மேலாக தலைநகர் சென்னைக்காக 'சென்னை - சூப்பர் 6' வாக்குறுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்போது அறிவித்தார்கள்.

அனைத்து வசதிகளையும் செய்து தருவோம், சிறப்பான போக்கு வரத்தை வழங்குவோம், உட்கட்டமைப்புத் திட்டங்களை உரிய காலத்தில் முடிப்போம், விலங்குகளின் தொல்லைகளில் இருந்து காப்போம், உலகளா விய சிறப்பு மையம் உருவாக்குவோம், உலகளாவிய திறமை மையமாக சென்னையை உருவாக்குவோம் என்று உறுதி அளித்தார்கள்.

அதில் மிக மிக முக்கியமானது -

பாதாளச் சாக்கடைத் திட்டம் 2027 ஆம் ஆண்டுக்குள் முடியும். மழை நீர் வடிகால் பணிகள் 2028 ஆம் ஆண்டுக்குள் முடியும் - என்பது ஆகும். ஆட்சி தொடர்ந்து இருந்தால் இப்பணிகள் முறையாக நடைபெற்றிருக்கக் கூடும். ஆனால் த.வெ.க. ஆட்சி இப்பணிகளைத் தொடர்கிறதா? என்பதுதான் நம்மு டைய கேள்வி.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் ஏதாவது காரணத்தைச் சொல்லி முடக்கி வைத்துள்ளது த.வெ.க. அரசு. இதனால் பாதிக்கப்படப் போவது மக்கள் தான். அதாவது, திட்டங்களை முடக்கி மக்களது நிம்மதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது த.வெ.க. அரசு.

கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட பணிகளை முறையாகச் செய்து, முழுமையாக முடித்துக் கொடுத்தாலே போதும். அதை த.வெ.க. அரசு செய்ய வேண்டும்.

திட்டங்கள் தீட்டி, பணத்தையும் ஒதுக்கி, பாதியளவுக்கும் மேல் முடிக்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து செய்து முடிப்பதில் த.வெ.க. அரசு கவனத்தைச் செலுத்த வேண்டுமே தவிர, தி.மு.க.வுக்கு எதிராக ரீல்ஸ் போட்டு காலத்தைக் கடத்தக் கூடாது.

திட்டுவதில் இருக்கும் ஆர்வம், திட்டங்களில் இருக்கட்டும்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - திருமதி துர்கா ஸ்டாலின் ஆகியோரை அவர்களது இல்லத்தில் தே.மு.தி.க. மாநிலங்களவை உறுப்பினர் எல்.கே.சுதீஸ் தமது துணைவியார் பூர்ணஜோதியுடன் சென்று சந்தித்து தமது புதல்வியின் மணவிழா அழைப்பிதழை வழங்கினார். அதுபோது தே.மு.தி.க. பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. உடன் உள்ளார்.

பெரம்பூர் சுரங்கப்பாதையில் தண்ணீரை அகற்ற நடவடிக்கை!

சென்னையில் மழைநீர் அகற்றும் பணி!

மேயர் பிரியா ஆய்வு!

சென்னை, அக். 22- திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட கால்வாய் பணிகளால், சென்னையில் அதிகன மழை பெய்த நிலையிலும் மழைநீர் உடனடியாக வடிந்தது. இருந்த போதிலும், த.வெ.க. ஆட்சியில் கால்வாய் பராமரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாததால், சென்னையின் சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி காணப்படுகிறது.

பருவமழை முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை முறையாக மேற் கொள்ளாத த.வெ.க. அரசு, தற்போது, தேங்கிய மழை நீரை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இந்நிலையில், திரு.வி.க. நகர் மண்டலத்திற்குபட்ட பெரம்பூர் சுரங்கப் பாதையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் அகற்றும் நடவடிக்கைகளை மேயர் பிரியா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, மழைநீர் தேங்கும் பகுதிகளில் தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு, தண்ணீரை விரைந்து வெளியேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது மண்டல அலுவலர் சதீஷ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

அதிகாரத்திற்கு அஞ்சாமல் ஊடக அறத்துடன்

'ABP நாடு' மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்!

தமிழில் செய்தித் தொலைக்காட்சி தொடங்கியது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 22- "அதிகாரத்திற்கு அஞ்சாமல் ஊடக அறத்துடன் 'ABP நாடு' மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'ABP நாடு' தமிழில் செய்தித் தொலைக் காட்சி தொடங்கியது குறித்து வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

நூற்றாண்டு வரலாற்றுப் பெருமைகொண்ட ABP குழுமத் தின் ' @abpnadu ', 24 மணி நேர ஒளிபரப்பைத் தமிழில் தொடங்கியிருப்பதற்கு மன மார்ந்த வாழ்த்துகள்!

செய்திகளை முந்தித் தரும் வேகத்தைவிட, உண்மையை உறுதிசெய்து தரும் பொறுப்பே ஊடகத்தின் உயர்ந்த அறம்!

அதிகாரத்திற்கு அஞ்சாமல், மக்களின் குரலாகவும் சமூகத் தின் மனசாட்சியாகவும் திகழ்ந்து, ஊடக அறத்துடன் 'ABP நாடு' மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.

ஆர்.டி.சேகர் தலைமை! மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர்

பெரம்பூர் த.ஆறுமுகம் இல்ல மணவிழா வரவேற்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துகிறார்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, அக். 22 – மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க (தொ.மு.ச.) பொதுச் செயலாளர் – பெரம்பூர் 44வது வட்டக் கழகச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் – ஆ.இராஜலட்சுமி ஆகியோரின் புதல்வி ஆ.தமிழ் பொன்னிக்கும் சென்னை கோடம்பாக்கம் வி.குமார் – கே.ரமாதேவி ஆகியோரின் புதல்வர் கே.விக்னேஷ்க்கும் மணவிழா 25.10.2026 ஞாயிறு காலை 9 மணியளவில் மூலக்கடை ஜங்ஷனில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.



இம்மணவிழா வரவேற்பு 24.10.2026 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மூலக் கடை ஜங்ஷனில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி மகாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழா வரவேற்புக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர் தலைமை வகிக்கிறார். கலாநிதி வீராசாமி எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம், தா.இளைய அருணா, பி.டி.சி. ஜி.செல்வராஜ், பி.டி.சி.வெ.பாலு, க.ஜெயராமன், அ.முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின் றனர்.

இரா.நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், டி.கமலக்கண்ணன், அ.தமிழ்ச் செல்வன், ப.மதிவாணன், வி.அமுலு, நா.சேகர் ஆகியோர் வர வேற்கின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கே.என்.நேரு எம்.எல்.ஏ., ஆ.இராசா எம்.பி., ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, மா.சுப்பிர மணியன், பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., தா.மோ.அன்பரசன், சா.சி.சிவசங்கர், ஆவடி சா.மு.நாசர், கோவி செழியன் எம்.எல்.ஏ., இரா.கிரிராஜன் எம்.பி., எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, நே.சிற்றரசு, மயிலை த.வேலு, கனிமொழி என்.வி.என்.சோமு, புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா,

ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால், ப.ரங்கநாதன், ஜே.ஜே.எபினேசர், ஐ.ரீம் இரா.மூர்த்தி, இ.பரந்தாமன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல், கே.பி.சங்கர், மேயர் பிரியா, துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் இவ்விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.